**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 22.05.2025.**
**SC.No. 71/2019**

**A1, A2, A3 and A8 absent, petition filed and allowed. Other accused present. Both side counsels present.**

அ.சா. 2 திரு. வின்செண்ட் அவர்கள் முன்னிலையாகி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை தொடர்ச்சி : நீதிமன்றத்தில் காட்டப்படும் கத்தியைப் பயன்படுத்தி சந்திரபோஸ் என்கிற உலகநம்பி என்னை, என் வலது பக்க வயிற்றின் மேற்பகுதியில் குத்தினார். அருள் ஞான பிரகாசம் அதே கத்தியால் எனது வலது பக்க அல்லையில் குத்தினார், அது சா.பொ. 1. நீதிமன்றத்தில் காட்டப்படும் இரண்டு மரக்கட்டைகளைப் பயன்படுத்தி மைக்கேல் ராஜ், ஜேசு, யூனிக்கோ, செபஸ்தியார் ஆகியோர் எங்களை அடித்தனர். அதனால் என் மனைவிக்கு தலையின் பின்பகுதியில் அடிபட்டு நரம்பு கட்டாகி, அவருக்கு தற்போது கண் பார்வை சுத்தமாக தெரிவதில்லை. மேற்கண்ட மரக்கட்டைகள் சா.பொ. 2 மற்றும் சா.பொ. 3. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

எதிரி தரப்பில் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை இன்றைக்கு இல்லை.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.05.22 19:02:29 +0530